உ

சிவமயம்



# சீரணி அந்தாதி

சிவமயம்

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய்

# சீரணி அருள்மிகு நாகம்மாள்

# திருவந்தாதி

இயற்றியவர்: கவிஞர் அம்பிகைதாசன்

வெளியீடு: சாமி கி. பாலகிருஷ்ணக் குருக்கள்
(தேவஸ்தான குரு)

அச்சுப்பதிப்பு: திருமொழி அச்சகம்,
பிரதான வீதி,
சங்கானை

1990

# பாராட்டுரை

சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் மெய்யடியார்களுக்கு ஏற்றவகையில் இப்பாடல்களை சீரணி அந்தாதி என்ற பெயருடன் கவிஞர் அம்பிகைதாசன் (வித்துவான் சு. சின்னத்தம்பி) பாடியுள்ளார்

அம்பாளின் மகோற்சவ விழாக்காலத்தில் மெய்யடியார்களுக்கு அன்னையின் திருவருளை நினைவுகூர்வதற்கு மிகச்சிறந்த கலைப்பொக்கிசமாக விளங்குகிறது.

அம்பாளின் அருட்கவி பாடிய அம்பிகைதாசனுக்கும் இதை அச்சிட்டு வெளியிடும் பிரம்மஸ்ரீ பாலகிருஷ்ணகுருக்களுக்கும் இதற்கு முழுஒத்தாசை தந்துதவிய ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தர்மகத்தாசபைக்கும் என் உளங்கனிந்த பாராட்டு உரித்தாகுக.

இங்ஙனம்
**பிரம்மஸ்ரீ கைலாசநாதக் குருக்கள்**
தேவஸ்தான பிரதமகுரு

# அணிந்துரை

அம்பிகை அடியார்களே!

எமது அன்னை சீரணி நாகம்மாளின் மகத்துவத்தை அவளது அடியாராகிய கவிஞர் அம்பிகைதாசன் என்பவர் அவள் ஊட்ட உணர்ந்து ஒரு அந்தாதியாகப் பாடியுள்ளார். அவரது இப்பாடல்கள் பக்திப்பிரவாகமும் சொற்சுவை, பொருட்சுவை சந்த இன்பமும் பொருந்தி அடியார்கள் உள்ளங்களைக் கவர்வதுடன் அடியார்கட்கு இஷ்ட சித்திகளையும் பெறுதற்கு உதவுவன.

மெய்யடியார் இந்நூலைப் வாங்கிப்படித்து அநுக்கிரகம் பெறுவார்கள் என்பது அடியேனது சித்தம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

இங்ஙனம்
**மு. ஐயாத்துரை**
தலைவர்
சீரணி நாகபூஷணி தேவஸ்தான
தர்மகர்த்தாசபை

# ஆசியுரை

அருளும் செல்வமும் சிறப்பும்மிக்க மக்கள் நாள் தோறும் வணங்குவதற்காக அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் அருள் கொண்டாள். அவளையே முக்கண் முதல்வியாகக்கொண்டு திரு அம்பிகைதாசன் அவர்கள் ''சீரணி அந்தாதி'' என்னும் தலைப்பில் 101 பாடல்களைப் பாடியமைக்கு எங்கள் சீரணி அம்பாள் என்றென்றும்ஆசிவழங்குவார்

இங்ஙனம்
**சாமி கி. பாலகிருஷ்ணக் குருக்கள்**
தேவஸ்தான குரு

# அணிந்துரை

ஆரணம் போற்றும் அரன்திருத் தேவி
ஐங்கரற் கறுமுகற் கன்னை
சீரணி நாக பூஷணித் தாய்க்கு
சிறப்புள பாடல்கள் படித்தார்
ஆரறி வுள்ள அம்பிகை தாசன்
அதைப்படித் தகமகிழ் வுற்றேம்
ஊரவர் எல்லாம் உயர்திருப் பாட்டை
உவப்புடன் கற்றிடல் நன்று

**வே. கனகசபாபதி**
செயலாளர்
தர்மகர்த்தா சபை

சிவமயம்

## அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரதர்நாராயண தேவஸ்தான அறங்காவலர்

## அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர் பாடிய

# அணிந்துரை

1) காரண மாக நாக கன்னியர் தாலாட்டிட்டு
பேரணி பூசை யாற்றும் பெருமைசேர் சண்டிருப்பாய்
சீரணி நாகம் மாளின் திருவடிப் புகழை ஈங்கே
ஆரண நெறியிற் தந்தான் அம்பிகை தாசச் செல்வன்

2) அம்பிகை பாதம் போற்றும் அருட்கவி யாக நின்றான்
உம்பரும் போற்றுகின்ற உத்தம பக்தி வெள்ளம்
தம்பெரு மனத்திற்பாய தமிழ்க் கவிமாலை யாத்தாள்
எம்பெரு மாட்டி ரூபம் இதயத்தில் தோன்றுமாறே

3) அன்னையின் பேரில் வந்த அந்தாதி விருத்த மெல்லாம்
உன்னியிங் கோதுவோரின் உலாத்திலே கற்பகம் போல்
முன்னிய சுகம் சுரக்கும் முத்தியின் வழியும் காட்டும்
மன்னிய நாகம்மாளின் மலரடி நல்குமம்மா

**அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர்**

# அவையடக்கம்

ஆதியந்த மில்லாத அம்பிகைஅந் தாதியவள்
பாதம் பிடிப்பதற்குப் பாடினேன் - ஏதும்
பிழை பொறுத்துக் கொண்மின் பெருமாட்டி காட்டும்
வழி நமக்கு வாய்த்த மருந்து.

ஆக்கியோன்

சிவமயம்

சண்டிலிப்பாய்

# சீரணி ஸ்ரீ நாகம்மை திருவந்தாதி

## காப்பு

சீரணி நாகம் மாளைச் சிந்தை யிலிருத் தியன்ன
பூரணி புகழைப் பாடப் பொருந்தினேன் ஓரந்தாதி
ஏரணி செய்யும் எந்தை மருதடி வீற்றிருக்கும்
ஏரம் பாவென் னைக்காத்து பாடிட அருளுவாயே.

## நூல் விருத்தம்

ஆதியாம் கடவுளன் னையம் பிகையள விலாத
பேதமா முயிர்க ளோடும் பிரிந்தும் நின்றருள் சுரக்கும்
வேதமோ டாகமங் கள்விதந் திடும்நா கவல்லி
சீதமார் வயல்கள் சூழும் சீரணி உறைகின் றாளே 1

உறைந்திடும் உமையே எங்கள் உளங்கவர் கள்ளி உள்ளம்
நிறைந்திடு பக்தி வெள்ளம் நின்மலி கோவி லெங்கும்
திறந்திடு மடையைப் போல வழிந்திட வழிபா டாற்றுந்
திறந்தனைத் தந்து உந்தன் திருக்க(ண்)ணை நல்கு வாயே 2

நல்குமுன் கடைக்கண் ணோக்கில் நணைந்துநாம் சேவைசெய்ய
வல்லவாழ் வளித்து மேலாம் வரங்களை யள்ளித் தந்து
ஒல்லை உன்செம் பொற்கோ வில்லொளி தரவிளங்கும் செய்ய
செல்விசீ ரணியிலென்றும் திகழ்ந்திடு நாகம் மாளே. 3

நாகங் கள்பணி யாய்ப்பூண்டு நம்மிடர் தீர்க்க வந்த
பாகிநீ பரிந்து பாதம் பாரிடை மிதித்துப் பைம்பொன்
ஆகத் தைத்தெரி யக்காட் டியாரிடர் தீர்க்க நின்ற
நாகபூ ஷணியே யுந்தன் நளிரடி போற்றி போற்றி 4

போற்றியென் றிருப்பவர்க்குப் பொன்னொடு பொருளும் பூத்துத்
தேற்றிய சிந்தை தந்துதெய் வம்போல் வடிவும் தந்து
ஆற்றிய தொழிலுக் கெல்லாம் அளவிலாப் பயனும் தந்து
ஏற்றமுற் றிடவே எந்தாய் ஏழையோர்க் கருளு வாயே 5

வாயொடு மனத்து முந்தன் வான்புகழ் சொல்லிச் சொல்லி
தாயெமை ஆள்வா யென்று தாளடி பணிந்து நின்று
காயமு முனக்கே யாக்கிக் கருதுபல் பணிகள் செய்து
நேயமும் நினைவும் நீங்கா நிலையினை அருளுவாயே 6

அருளுமுன் இருக்கரங் களபய மென்றழைக்கும் போது
உருகுமுன் னடியார் கூட்டம் உன்திரு நாமம் சொல்லி
அரவணி தாயே யெம்மை யாண்டரு ளம்மா வென்று
பரசொலி முரசம் போலப் பார்மிசை யிசைக்கு மம்மே 7

மேதினி முழுதும் போற்றும் மேன்மை கொள்சீ ரணித்தாய்
போதினி லிருக்கும் தெய்வப் பூவைய ரிருவ ரோடும்
ஓதுநற் றேழிமார்கள் ஒன்பது மாதரோடும்
தீதில் சீரணி யில்நின்று திருநிலம் காக்கின் றாளே 8

காப்பவள் கடைக்கண் நோக்கிக் கதிபல தரவும் வல்லாள்
மாப்பெரும் கருணையாலே மாநிலம் நிறைந்து நிற்பாள்
கோப்பெரும் தேவி எங்கள் குணநலம் பேணும் நீராள்
மூப்புடை முதல்வி ஞாலம் முழுவதும் புரக் கின்றாளே 9

புரந்தரி புவனி நாக பூஷணி புலவரேத்தும்
நிரந்தரி நிமலி நீலி நிறைமதி வதனி மாரி
கரந்தனில் கவச மேந்திக் காக்குங் காரணி குமாரி
துரந்தரி தூய செம்பொற் சிலம்பணி திருத்தாள் போற்றி 10

போற்றிட அரவம் பூண்டு வேப்பிலைக் கரகமேந்தி
ஆர்ப்பரித் தாடு மன்னை அருள்தரு மாட்டங் கண்டு
ஊர்ப்பரி வாரம் கூடி உவந் தவட் கடிமை பூண்டு
பார்த்திடப் பவனி காட்டும் பராபரி புவனி காப்பாள் 11

காவலாய் இருக்கும் தாயே கருதிய தெல்லாம் நல்கும்
ஆவலாய் அரசி ஆலம் அணிந்தவன் மகிழும் தேவி
பூவ(ல்)லீ புரக்கு முந்தன் புகழணி சீரமேற் சூடி
நாவலார் பலரும் போற்றும் நாகிநீ நாடுவோமே 12

ஏயபல் பிறவிதோ றுமியைந் துயேயியங் க வைக்கும்
தூயபொற் பாதம் போற்றித் தொழுதிட வருவோர்க்கன்னை
நேயமும் நினைவும் காட்டி நிரந்தரம் அருளைக் காட்டும்
சாயலைக் காணக காணச் சாந்தியே பெருகு தம்மா 13

அம்மணி அரவை யார்த்து அருளுஞ் சீரணியில் நின்று
நிம்மதி பெறவே யுந்தன் நிழலடி தொழுவோர்க் கன்னை
மம்மரும் மயலும் நீக்கி மனநிறை வருளு கின்றாய்
மும்முலை யாளே உந்தன் முகமலர் உள்ளுவோமே 14

உள்ளதென் றிருப்பார்க் கன்றி இலதென மறுப்ப வர்க்கும்
கள்ளமில் லாதுஅள் ளித்தரு கின்றா ளெங்கள் அன்னை
எள்ளினில் எண்ணெ யென்றும் எரியுறு நீரே யென்றும்
தள்ளொணாத் தகவு கொண்ட தாயிவள் எங்கள் தாயே 15

தாயினும் மேலாந் தாயே தளிரிள நகையைக் காட்டி
பேயொடு நான்நின் றாலும் பிரித்தெனை அறிய வொண்ணா
நாயினுங் கடைய னான நாயெனைக் கடைக்க ணித்த
நாயகி நளினி நாத நர்த்தனி நாதரூபி 16

நாதமும் ஒளியு மாகி நானிலம் நிறைந்த தேவி
வேதமும் முதலு மான வித்தகி விளங்கும் ஞான
போதகி புண்ணி யத்தின் புநர்வடி வாக வந்த
சீதள வயல்கள் சூழ்ந்த சீரணி நாகம்மாளே 17

நாகங் களணிந்து எந்தாய் நயந்துவீற் றிருக்கும் தேவி
ஏகமாய் கோவில் போந்து எளிதினில் காட்சி தந்து
போகமும் பொருளு மீந்து புகலிடமாக நின்று
யாகங் கள்வளருஞ் சோலை யாயசீ ரணியு ளாயே 18

உளத்தினைத் தெளிய வைத்து உணர்வெலாம் அவட்கேயாக்கிப்
பழவினை முழுதும் மாயப் பார்வதி அருளைப் பேணி
களவிலாத் தொண்டு செய்து காதலித் தன்னை பாதம்
தொழுபவர்க் கில்லை தோஷம் தொல்லையுந் துயருமாமே 19

துந்துபி முழங்கும் கோவிற் துரந்தரி துர்க்கை மாரி
கந்தரி கமலி காளி காத்தருள் புரியும் வாமி
அந்தரி அமலி ஆதி அங்கயற் கண்ணி காமி
நந்தினி நயனி நாக நர்த்தகி நாகம் மாளே 20

மாலொடு அயனுந் தேவர் மாதவர் முனிவர் யாரும்
சாலவும் பணிந்து நின்று சந்ததம் வணங்கி னாலும்
காலமும் இடமும் நோக்கிக் கனிந்தருட் பார்வை நல்கும்
சீலிசீ ரணியைச் சேர்ந்தால் சீக்கிரம் வருகு வாளே 21

வந்தருள் வாமி பாகம் வைத்தவர் பாகம் நீங்கி
நொந்தவர்க் கருள வேண்டி நோற்பவர் வாழும் வன்னப்
பைந்தளிர்ச் சோலை மல்கும் பாரினில் சிறப்பு மிக்க
சிந்தைகொள் சீர ணிக்கே சேவிக்கும் சிறப்புத் தந்தாள் 22

தந்திமா முகனைத் தந்த தாயிவள் தரணி காக்கும்
முந்துமா லவனின் தங்கை முக்கணுள் முதல்வியான
அந்தமொன் றில்லா ஆதி அம்பிகை யாக வந்த
சுந்தரி துயரம் நீக்கும் துரந்தரி அரண் நமக்கே 23

அரண்நமக் கென்னும் அன்னை அன்பொடு மானுர் வந்து
வரனென நின்ற போது வாஞ்சை யோடவளைச் சேர்ந்து
கரந்தனைப் பற்றி நின்ற காஞ்சியில் வளர்ந்த தேவி
சரணெனப் போற்று வார்சீ ரணியினுக் கபய மாமே 24

அபய மென்றழைத் துஅன்பர் அடைக்கலம் புகுந்தபோது
உபயதா மரைகள் காட்டி உவந் தருட் பார்வை நல்கும்
நயன மூன்றுடை யதேவி யமபயம் நீங்கியாளும்
சயனங் கொள்நா கமீது தயாபரி ஈன்ற தாயே 25

ஈன்ற தாயிக லிநின் றுலிடர்களைவார் கள்யாரே
தோன்று வார்துயர் துடைக்கச் சுந்தரி யிவளையன்றி
ஆனறவே தங்கள் கூறும் அம்பிகை நிழலை நீக்காக்
கான்றபே ரிடர்கள் நீக்கக் கவன்றிடு வார்கட் கிங்கே 26

ஈங்கர சாளு மெங்கள் ஈஸ்வரி சீர ணித்தாய்
ஓங்குயர் தெங்கஞ் சோலை உயர்மரக் காவுங்கொண்ட
வீங்குநீர் வயல்கள் சூழ வித்தகக் கோவில் கொண்டு
ஆங்கொரு அடியாள் பூசை அன்பினுக் காளாய் நின்றுள் 27

அடியவள் செய்தபூசை அன்பினுக் காளாய் நின்ற
நெடியவள் கடல்கடந்து வழிபட முடியா அன்புக்
குடையமு தாட்டிக் ஈங்குஉவந் தவட்கருள வேண்டி
கடிகமழ் நயினைநாகி காட்சிதந் தீங்கும் நிற்பாள் 28

நின்றநா கம்மை ஈங்கு நிலைத்தவள் மிலைந்த சென்னி
நன்றென நாகம் பூண்டு நாகபூ ஷணியாய் நின்று
கன்றுகள் கதறும்போது காத்திடும் கற்ற போன்று
துன்றிடும் அடியேன் துன்பம் துடைத்திடக் கனவு கண்டேன் 29

கனவினில் கண்டஎன்னைக் கருத்தொடு மழைத்தா ளன்னை
நனவினில் அவளைக் காண நயந்து நான் சென்றபோது
கனவினில் கண்டஐயர் அன்பொடும் அருகே நின்று
மனமொடு பூசை செய்யும் மாண்புகண் டதிசயித்தேன் 30

அதிசயம் ஆங்குக் கண்ட அம்பிகை கனவில் என்முன்
துதிசெயும் நங்கையாக சுறுக்கென வளர்ந்து நின்று
இதுவரை காண்கிலா தவிமை யவள் முறுவல் பூத்தாள்
எதுதவம் செய்தேன் எந்தன் இப்பிறப் பிருந்தவாறே 31

இருந்தவம் செய்த என்னைப் பொருந்திட நோக்கி யன்னை
வருந்திட வேண்டா மென்று வாய்மலர்ந் தருளி நின்றாள்
மருந்தினி வேண்டா மென்று மனதில் எண்ணிக் கொண்டு
இருந்தனன் இதுவரைக்கும் எய்திட முடியா இன்பம் 32

இன்பத் தினெல் லைகாணேன் எழிலுரு தெரியக் கண்டேன்
பொன்னவிர் மேனி யோடும் பூணர வங்க ளோடும்
செந்நிறப் பட்டுத்தி திகழும் பொற் கலன்கள் பூண்டு
என்கணில் நிறைந்து நின்றாள் என்மனக் கண்ணிலுள்ளாள் 33

உள்ளமு மொடுங்கா நிற்க உடம்பெலாம் புளகம் கொள்ள
வெள்ளம் போறகண் ணீர்வார வியர்வையு மரும்ப நின்று
கள்ளவிழ் மலர்கள் சூடும் கயல்விழி யாளை நோக்கித்
தெள்ளுசெந் தமிழே தேனே தேவியென் றழுது நின்றேன் 34

நிறையருள் புரியு மன்னை நினைப்பவர் மனத்தினுள்ளே
தெருளுரு தெரியக் காட்டித் தெளிந்தவர் பளிங்கு போன்ற
திருவளர் சிந்தை யுள்ளே ஒளியினை யேற்றி வைப்பாள்
மருளிரு ளாகி நிற்பாள் மாண்பிலார் மனத் தகத்தே 35

துரப்பவள் தூயோர் தம்மைத் தூக்கியே எடுப்பா ளன்னை
கரப்பவள் தன்னை மேலும் காய்பவள் கருதா தாரை
மறப்பெருங் கருணை யாலே மாய்ப்பவள் மறவோர் தம்மை
மறைத்தவர் கருத்தைப் போக்கி மதிநலம் அருளுவாளே 36

அருள்தர இருந்த அன்னை ஆலவா யுடைய வண்ணல்
திருக்கரம் பற்ற வெண்ணித் தடாதகை யாகச் செங்கோல்
தரித்துல காண்டதேவி தாமரைச் செல்வி ஞாலம்
பரிந்திடக் கலச மேந்தி பாரிற்பல் லறங்கள் செய்தாள் 37

செய்ய பொன்மே னிமீது சேர்பவ ளம்போல் வாயள்
தையலாள் பணிகள் பூண்டு தரளம் போல்மு ரல்செய்து
கைகளிற் கடக மாடக் காரிருள் தன்னைச் சீக்கும்
வெய்யவன் போலுதித்து வெம்பகை களையும் நீராள் 38

நீரொளிர் பவளமேனி நித்திலம் கொழித்து நீடு
தாரொளி தயங்க நின்று தண்ணளி நயனமோடு
பேரருள் வழங்கு வாளைப் பெண்ணினம் சூழ நின்று
பேறெனக் கரங்க ளேந்திப் பெரிதுமன் றுடுவாரே 39

## வேறு

வாருங்குழ லேந்தும் மதி போலும் மகிழ் வதனி
தேருஞ்சீ ரணிசேர்பதி திகழும்பர மேட்டி
யாரும்அவள் அருள்தாளினில் வீழின்வினை போகும்
கோரும்அவர் குறையாவுமே தீருந்திற லோங்கும் 40

ஓங்கும்மத கரிபோல்வினை உள்ளந்தனை யொடுக்க
ஆங்கங்குச பாசம்அவள் தரித்தேயருள் புரிவாள்
தேங்குஞ்சிவ ஞானந்தர வல்லாளவள் அருளால்
வாங்கும்பனி போலெம்வினை வடியச்சிவம் சேரும் 41

சேருஞ்சிவ ஞானம்பெறத் திருந்தாமனக் குரங்கை
ஓரும்வகை உணர்த்தியதை ஒருங்கேமனம் திருப்பித்
தாருமென அவள்தாளடி சார்ந்தேதவம் முயன்றால்
சீறும்மனம் அடங்கும்புலன் ஐந்துமங் கொடுங்கும் 42

ஒடுங்குமிடை யுடையாள்நமை உடையாள்நமை ஒடுக்கும்
நடுங்குமிடர் நவையாவுமே நணுகாவகை யருள்வாள்
கடுஞ்சும்பன் நிசும்பன்தமை கடிதேயழித் தசுரர்
அடங்கும்படி ஆண்டாள்தன தடியார்களைக் காத்தாள் 43

காத்தாயியென் றேத்தும்படி காவல்பல பூண்டாள்
ஆத்தாளவள் அரவம்பல அணியாகவே ஆண்டாள்
பூத்தாளவள் உலகம்பல புன்மைகளைத் தீர்த்தாள்
ஏத்தாதவர் எவராயினும் இடர்தந்துபின் சேர்ப்பாள் 44

சேருந்திருப் பாதங்களிற் செறித்தாள்பல சிலம்பு
ஆரும்அவள் அணிதாளினில் அலம்பும்பல சதங்கை
தாருஞ்சடை முடியும்உடை யானேடவள் ஆடி
பேரும்மிகு புகழும்பெற வல்லாளவள் காளி 45

காளியவள் நீலிதிரி சூலிசிவ காமி
மீளிமீ னாட்சியெமை யாளுங்கா மாட்சி
கோளுங்கொடு வினையுமெமைக் கொல்லும்படி வரினும்
மீளும்படி வரமுந்தர வல்லாளெம தன்னை 46

அன்னைமவிர் சடையாளிடை மின்னலென உடையாள்
மன்னும்மா துளை மாங்கனிக் கன்னங்கவின் குழையாள்
அன்னம்பணி நடையாளுயர் அங்கம்பணி பூண்டாள்
வன்னப்பொழில் வளர்சீரணி வடிவாம்பிகை யவளே 47

அவளேயர னோடேயுறை அழகார்கயி லையிலே
நுவலுந்திற லிகல்ராவணன் திருமாமலை எடுக்க
துவளுந்திரு மேனிமிகத் துவண்டாள்பரன் அணைத்தான்
அவளத்தனோ டுறைவாளெளின் அருள்சீரணி மறவாள் 48

மறலிமிக நடுங்கும்கொடு மகிடன்முடி வணங்கான
விறலும்கொடு விடமும்உடல் விதிர்க்கும்படி மறமும்
தெறலும்மிக உடையானுயிர் குடித்தேநிலம் புரக்கும்
அறந்தாங்கியெம் அருள்சீரணி அமர்ந்தேயருள் தருவாள் 49

தக்கன்தரு மகளாகிய தாட்சாயினி அன்னை
தக்கன்செயும் யாகந்தனைத் தரமன்றென ஒறுத்து
நக்கன்மகிழ்ந் தேத்தும்படி நாலெட்டறம் செய்து
புக்காள்புகழ் ஓங்கும்படி அத்தானொடும் உறைவாள் 50

உண்ணாமுலை உடையாயுல கெல்லாம்பா லூட்டும்
பெண்ணாகவே பிறந்தாயெமைப் பேணிநிதம் காப்பாய்
மண்ணாமணி வண்ணன்தரு மகிழ்சோதரி நீயே
தண்ணார்பொழில் தளிர்சீரணித் தாயேயருள் வாயே 51

## வேறு

அங்க(ண்)ணி கங்கண மாயர வங்கை அங்க மணிந்தவளே
மங்குல் தவழ்ந்திடு மலர்ப்பொழில் சீரணி தங்கும் உமையவளே
சங்கர னங்க மணைந்து குழைந்திடப் பொங்கி மகிழ்பவளே
எங்கள் குலங்களை யிங்கு தழைத்திட இன்னருள் புரிபவளே 52

புரந்தர னோடிமை யோர்களும் போற்றிடப் பூவுல காள்பவளே
கரந்தனில் கரும்பொடு கலசமும் ஏந்திய கருமுகில் போன்றவளே
மருந்தென இருந்தெமை வருத்தமும் தணித்திட வந்தருள் சீரணிசேர்
புரந்தனில் பொருந்திடு புற்றினில் பூரணி இருந்தருள் புரிபவளே 53

வளியனல் நீரொடு வானென நிலனென வரைந்திடு பூதமைந்தும்
மிளிர்பவ ளேயவை யாக்கி யளித்துப்பின் அழித்து மகிழ்பவளே
தளிரடித் தாமரை தாழ்ந்து வணங்கிடத் தண்ணளி பொழிபவளே
எளியவ ரேத்திட இன்னருள் புரிந்துல காளும் பெரியவளே 54

பெரியவ ளேபர மானந்தப் பேற்றினை பேணித் தருபவளே
கரியவ ளேகரு மாரியெனத் திகழ் கண்மணி யானவளே
உரியவ ளேயுல கெங்கணு உனதென உரிமையும் பூண்டவளே
அரியவ ளாரணி அன்னமே பூரணி அம்பிகை சங்கரியே 55

சங்கரி சாம்பவி சதுர்மறை சொல்லிடும் வாயகி நாயகியே
மங்கள மாலினி மலைமகள் அலைமகள் மாதுமனோன்மணியே
குங்கும நாயகி கோமளை யாமளைக் கொற்றவை துர்க்கையளே
சங்கடம் தீர்ந்திடச் சஞ்சல மோய்ந்திட வெம்பகை சாய்ப்பவளே 56

## வேறு

சாய்ந்தாடும் நாகம்மை சரித்திரத்துக்
கெட்டாத காலந் தொட்டு
தாய்ப்பாசம் மிகவூட்டித் தாலாட்டிச்
சீராட்டித் தகுதியாக்கி
வாய்ப்பாக வளர்த்தெடுத்து வளம்பலவும்
ஆக்கியெமை ஆதரித்து
மேய்ப்பாளும் அவளாக மீட்பாளும்
அவளாக நிலவுவாளே 57

நிலவுமொரு நாகம்மை நீக்கமற
நிறைந்திருக்கும் நீலமாது
பலவுலகும் படைத்தளித்து பரசமய
விருள் நீக்கும் பாசபாணி
நிலவுதிரு நீற்றினொளி நிலைத்திடவும்
கூடுமைந்தெ ழுத்தினொலி
பலித்திடவும் சிவப்பயிரை வளர்த்திடவும்
பராபரியாய் வாழ்கின்றாளே 58

வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் வளைந்துமனம்
தாழ்ந்தாலும் வாழ்வு வேண்டி
வாழ்த்தியொரு வரங்கேட்டு வடிவழகி
திருவடியில் வணங்கினாலே
வாழ்த்தியெமைக் கைதூக்கி வாழ்க்கையினை
வளமாக்கி வளர்த்தேநாளும்
ஆழ்த்திப்பே ரின்பத்தில் ஆராட்டும்
பாராட்டும் அளிப்பாளனறே 59

அறியாத கும்மிருட்டில் அகப்பட்ட
குழந்தையென அலமந்தோடி
நெறியறியாதேதேடி நேர்ந்தபல
துன்பத்தில் நிலைதள் ளாடி
குறியொன்றும் அறியாது கூப்பிடவும்
தெரியாது குழம்பும் போது
தெறிக்கின்ற மின்னலெனத் தெளிவாக
வழிகாட்டும் தேவீ அம்மா 60

அம்மா நான் உன்குழந்தை அப்போதும்
இப்போதும் எப்போ துந்தான்
பெம்மானின் பெருமாட்டி பிள்ளைப்பா
சம்மிகுந்த பேரு ராட்டி
கைம்மாறு கருதாத காத்தாயி
நானுன் னைக் காணவந்தேன்
அம்மா உன் அருகிருத்தி ஆதரவு
தந்தென்னை அணைப்பாய் நீயே 61

நீலவான் வெளியினிலே நித்திலம்போல்
மேனியளாய் நிலவில் வந்து
பாலமுதக் கிண்ணத்துடன் பாசமுடன்
ஆசையுடன் அருகில் நின்று
சீலமுடன் தாலாட்டிச் சேய்போல
எனக்கூட்டிச் சோர்வு நீக்கி
ஞாலமெலாம் ஆட்டுவித்து ஞானவித்தை
காட்டுவிக்கும் நாகம்மாளே 62

நட்டுவைத்த நாகம்மை நல்லழகி
திரிசூலி நம்மைக் காக்கும்
வட்டமதி முகமுடையாள் வளைக்கையாள்
திருக்கரத்தில் சூல மேந்தி
எட்டுமுள திக்கெல்லாம் எட்டியெட்டித்
தீமைகளை வெட்டி வீழ்த்தி
பட்டமரம் தளிர்த்திடவும் பாலைவனம்
செழித்திடவும் பாலிப் பாளே 63

பத்தினியாள் பார்வையிலே பட்டுவிட்டால்
எங்களுக்கு பக்தி வரும்
சித்திவரும் சேர்ந்தகலைச் செல்வமெலாம்
சேர்ந்துவரும் திகழும் வாழ்வு
சொத்துசுகம் தேடிவரும் சுதந்திரமாம்
வாழ்வு வரும் சோர்விலாத
சக்திவரும் முத்திவரும் தேவியருள்
பெற்று விட்டால் சுடரும் ஞானம் 64

ஞானவான் வெளியினிலே வரைகளிலே
நதிகளிலே கடலின் மேலும்
ஞானநா யகியாக நடமாடித்
திரிகின்றாள் நாமும் வேண்டி

ஊனமிலா உள்ளமொடும் ஒன்றியசீர்
உணர்விணைடும் உருகி நின்றால்
தேனமுத மழையாகத் தெள்ளுதமிழ்ச்
சுவையாகத் தெரிகின்றாளே 65

தெரிகின்ற நாகம்மை திருப்பதத்தி
லேவிழுந்து சேவித் தாலே
பொருத்தமுற வேயணைந்து பொய்கையென
வேகுளிர்ந்து பூரிப்போடு
வருத்தமெலாம் தான்தணித்து வந்தகுறை
கேட்டறிந்து வரமளிப்பாள்
அருத்தியொடும் அம்பிகையை அருள்சுரக்க
வேண்டுமென அஞ்சலிப்போம் 66

## வேறு

அஞ்சலி செய்பவர் சஞ்சலம் அகற்றும்
அஞ்சுக மொழியாள் நெஞ்சிலி ருப்பாள்
பஞ்சினி தந்தரு பாதங்க ளுடையாள்
பரவிடும் நான்முகி பரமனென் றேத்தும்
நஞ்சணி கண்டனைக் கொஞ்சிடும் நாயகி
தஞ்சுகம் போலவே நஞ்சுகம் காக்கும்
கஞ்ச மமர்ந்திடு காத்யா யினியைத்
தஞ்சமென் றிருப்பார்க் கவளணி யாளே 67

யாழினும் இனியாள் தேனிகர் மொழியாள்
தாள்பணிந் தேத்திடத் தண்ணளி பொழிவாள்
சூழ்ந்திடு மிருவினை தொலைத்திடத் தோகை
துணைதனை நாடியே புலனைந் தடக்கும்
ஏழ்பிற வியினும் இவள்துணை எனவே
வாயினும் மனத்தும் நினைந்திடு வோர்கள்
மாழை உண்கண்ணி மாரியம் பிகையைத்
தாள்பணிந் தேத்திடத் தரமுப ரும்மே 68

உமையே உன்பால முதுண்டு யர்ந்தவன்
சமணரை வென்றவன் சைவம் தழைத்திட
அமைதமிழ் அமுதினை அள்ளித் தந்தவன்
அருள்தரு குரவன் ஞானசம் பந்தன்
தமைப்போல் என்பால் அன்பால் வந்து
கமைசேர் மூங்கிற் புயமோர் நான்கும்
சுமையாய்க் கொள்ளாய் சுடர்க்கொடி போலச்
சுந்தரி வந்தெனக் கருள்சுரந் தாயே 69

தாயே நாயேன் ஓயா தலைந்தேன்
பேயாய்த் திரிந்தேன் பிணிபட் டுழன்றேன்
மாயா மலத்தில் மதிகெட் டலைந்தேன்
மண்ணிற் புழுப்போற் துடித்துத் திரிந்தேன்
சேயேன் துயரம் தெரிந்தே வந்தாய்
செடியேன் உரைக்கும் உள்ளத்துயரை
நீயே கேட்டாய் நிறைவே செய்தாய்
ஆயே அம்மே ஆரா வமுதே 70

ஆரா அமுதே அமுதாம் பிகையே
அழகேஸ் வரியே ராஜேஸ் வரியே
காரார் குழலாய் கனகாம் பிகையே
கருணை நிதியே சரணம் நீயே
தீரா வினைகள் வாரா தருள்வாய்
சீப்பாய் இருளைச் சேர்ப்பாய் அருளை
ஆரா அன்பால் அமுதே தொழுதோம்
அம்மா அருள்சீ ரணியம் மாளே 71

அம்மா இம்மா நிலத்தே யெண்ணெண்
தலமே சக்தி தலாமா மென்றே
நம்மால் வணங்கத் தகுமா மணித்தீ
வென்னும் நயினை நாகம் மாளே
பெம்மான் மகிழும் பரமேஸ் வரியே
பேதுறு மடியார்ப் பேணிட வந்த
இம்மா லிமயத் திமவான் பெற்ற
ஈஸ்வரி நீயே சீரணித் தாயே 72

அணித்தாய் இருந்தே பணித்தா யெம்மைப்
பிணித்தாய் அன்பாற் பிறழ விடாமல்
குனித்த புருவம் கொவ்வைச் செவ்வாய்க்
குமிழ்புன் சிரிப்பால் கொடுவெவ் வினைகள்
தணித்தாய் மருளை மறைத்தாய் உணர்வை
தெளித்தாய் தேனூர் அமிழ்தாய் திகழ்ந்தாய்
கனித்தேன் பொழியும் கவின்சீ ரணியில்
பிணிக்கு மருந்தாம் நாகேஸ் வரியே 73

வரதா மணியே மகிழ்சீ ரணிவாழ்
மாதினிபோதினி பரிபூ ரணியே
கருடா ரூடன் கண்ண பிரானின்
தங்கை யாகிய தாட்சா யிணியே

கரதா மரைகள் காட்டி எமது
மரணு பயங்கள் மறைக்கும் மணித்தாய்
சரணும் புயங்கள் தாழ்வாய்ப் பணிந்தோம்
கரணம் யாவும் கட்டிடுவாயே 74

கட்டிய செஞ்சடை உடையோன் நெற்றிப்
பொட்டினில் தோன்றிய பொறியொரு ஆறும்
கிட்டிய சரவணப் பொய்கை தவழ்ந்து
கிளர்ந்தொரு அறுமுக ஞக வளர்ந்து
மட்டில் மகிழ்வொடு மாதுமை நீயே
மார்போ டணைத்து வேல்கைக் கொடுத்து
முட்டிய சூரனை முடியோ டழித்து
மூவுல குக்கொரு தாயென வாய்த்தாய் 75

வாய்மைக் கும்நீ வளத்துக் கும்நீ
வாழ்வுக் கும்நீ தாழ்வுக் கும்நீ
தாய்மை கும்நீ தண்மைக் கும்நீ
தகவுக் கும்நீ உயர்வுக் கும்நீ
சேய்மைக் கும்நீ அண்மைக் கும்நீ
செழிப்புக்கும் நீ சிறப்புக் கும்நீ
ஆயே நீயே எல்லாம் அல்லால்
அறியும் தரமோ தாமோதரியே 76

## வேறு

தாமோத ரன்மகிழும் தங்கைநா கேஸ்வரியே
வாமியவள் வந்திருந்து வாளரவின் மேலமர்ந்து
பூமித்தாய் பொன்சொரிய புங்கவரும் போற்றிசைக்க
இமையரசன் ஈங்கனுப்ப ஈழத்தில் நாடாள்வாள் 77

நாகர்குலம் தாலாட்ட நாககன்னி குடையேந்த
நாகரத் தினமிழைந்த நாகவா சனத்தமர்ந்து
நாகம் சாமரைவீச நாகநாதன் மகிழ
நாகத்து வீபத்தில் நாகம்மை நல்லாட்சி 78

ஆட்சிபு ரிபவளே ஆட்டிப்ப டைப்பவளே
காட்சிக்கெ ளியவளே கண்ணுயி என்னுங்கா
மாட்சிவி சாலாட்சி மகிழும்மீ ஞட்சிமிகு
சாட்சிச கலருக்கும் சாட்சாத்ப ரமசிவை 79

சிவையே சிரங்காக்க சேய்கண்கள் நீகாக்க
செவிகாக்க சிவகாமி செந்நாவை நீகாக்க
கவியரசி முகங்காக்க கழுத்தையுமே நீகாக்க
புவியரசி கரங்காக்க புந்தியையும் காப்பாயே 80

காக்கபதி ஞறுபழு வோடுபார்வ தியேநிதமும்
காக்கமுலை மார்பைக்கா மாட்சிதோள் களையும்நீ
நீக்கமற நெஞ்சகத்தை நின்மலியே காத்திடுவாய்
தேக்கும்வயி றுந்திதிரு மகளேகாத் திடுவாயே 81

காக்கஇடை யொடுகாவல் செய்யரைஞா ணையும்நீ
வாய்ப்பாய்ந்தொ டையிரண்டும் வைரவியே காத்திடுவாய்
தாயேநீ காத்திடுவாய் தாளும்முழந் தாளுமொ[illegible]
சேயேன்பு றமுதுகும் செய்யவளின் காப்பாமே 82

மோதவரும் நோய்களையும் மூகாம்பி நீகாப்பாய்
சோதனைகள் வாராமல் சுந்தரியே காத்திடுவாய்
வாதமொடு பித்தம்வருத் துங்கொடுசி லேட்டுமமும்
வேதனைகள் யாதுமின்றி வேதவல்லி யுன்காப்பே 83

பேயோடுபி சாசுகளும் பில்லிசூனி யங்களெனும்
மாயைகளை நீயகற்றி மனநிறைவைத் தந்தருள்வாய்
ஆயேய றியாமையொடு அச்சம்மிகு வஞ்சனைகள்
நீயறிவா யாதலினால் நீங்கத்து ணையுரிவாய் 84

வாய்ந்தசீ ரணித்தாயே பஞ்சமொடு பசிப்பிணிகள்
தோய்ந்தபல துக்கங்கள் தோஷமொடு துயரங்கள்
தேய்ந்தழிந்து போய்விடவும் தெய்வீகம் சேர்ந்திடவும்
பாய்ந்தசிங்கம் ஏறிவரும் பகவதியே காப்பாயே 85

காப்பாய ணிந்தவளே கரந்துறையும் பாம்புகளை
காப்பாயே தீண்டாமல் கடுவிடங்க ளேறாமல்
வேப்பிலையைக் கைப்பிடித்து வெப்புநோய் தணிப்பவளே
காப்பாயே எங்களையும் காசினியைப் பெற்றவளே 86

பெற்றதாய் மறந்தாலும் உற்றதாய் மறவாயே
செற்றங்கள் கொள்ளாமல் தேவிமனம் பொறுப்பாயே
அற்பரையும் காப்பாயே அடிவருட வைப்பாயே
கொற்றவளே காப்பாயே கொடும்பிள்ளை களைநீயே 87

பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் பேறுபெற வந்தவர்க்கு
பிள்ளைப்பா சம்மிகுந்த பித்திநீ பிந்தாமல்
வ(ள்)ளைக்கை யாலவர்க்கு வரங்கொடுத்தே யன்னுரைத்
தள்ளைக ளாக்கியே தாய்மையும் படைப்பாயே 88

பட்டுப்ப ளபளென பாடகக்கா லாடிவர
முத்துப்ப ளபளென மூக்குத்தி தான்மின்ன
எட்டுத்தி சைநடத்தும் ஏந்திழையே நாகம்மா
வட்டக்கு டைநிழற்கீழ் வருவாயே நீபவனி 89

வந்திடுமே யுன்பவனி வளர்சித்தி ரைத்திங்கள்
சிந்தைம கிழ்ந்திடவே தேவிவரும் திருக்கோலம்
முந்துதினம் பத்தும்முடி வில்லாத வூர்க்கோலம்
சந்தமொடு மேளங்கள் தழங்கவரும் காவடிகள் 90

காவடிகள் கரகங்கள் சுற்பூரச் சட்டிகளும்
பூவையர்தம் அடியழிப்பு புருஷர்பிர தட்சணங்கள்
மேவுபுகழ் நாயகிக்கு விதம்விதமா மஞ்சலிகள்
தேவிவரும் வீதியிலே தேங்கிடுமே தேங்காய்கள் 91

தேங்காயு டைப்பவரும் தேரோடும் வீதியிலே
ஓங்காரம் சொல்லியுனைக் கூவிமிக அழைப்பவரும்
பாங்காகப் பொங்கலிட்டுப் படைத்தளித்து மகிழ்பவரும்
நீங்காத காட்சிகளே நின்மலியே நின்படையல் 92

பக்திவெள்ளம் பரந்தோடப் பாசவினை கரைந்தோட
எத்திசையும் உந்தனருள் ஏழுகடல் போலொலிக்க
பக்தர்கள் பாட்டொலியும் வேத்தொலியும் ஏத்தொலியும்
வித்தகியுன் வாசலிலே விண்முகட்டுக் கொலிபரப்பும் 93

பஞ்சதுந் துபிமுழங்க பாரிலுள்ளோர் ஆர்ப்பரிக்க
அஞ்சலிப்போர் மெய்சிலிர்த்து ஆனந்தக் கணீர்சொரிய
கொஞ்சுகிளி கைகளிலே கூடிவிளை யாடிவர
அஞ்சுதலை நாகமதில் அமர்தழகு செய்வாயே 94

**வேறு**

செங்கனகத் திருமேனி திகழ்பட்டுத் தாவணியும் செங்கையாடும்
கங்கணமும் காற்சிலம்பும் சரடுதட வடமும்முத்துச் சதங்கையோடு
பொங்குநவ ரத்தினமும் பூவணியும் பொலிவுரு முடியின் மீது
திங்களெனத் தயங்குமணிக் கிரீடமுடன் தயாபரியைச் சேவிப்போமே

சேவிக்க வீற்றிருக்கும் சீரணித்தாய் செங்கமல முகத்தைக் காட்டிக்
காவிக்கண் ணிணைகாட்டிக் கரும்புருவச் சிலைகாட்டிக் கருணை காட்டி
கோவைச்செவ் வாயிதழ்கள் குளிர்முத்து நகைகாட்டிக் குழைகள் காட்டி
னொவென்ற ழைத்திடுவாள் வளைந்தவர்கள் தழைத்திடுவார்
வளர்வார் என்றும்

என்றுமி இளமையளே இமவானின் திருமகளே இளைத்த பேர்க்கு
நின்றுமி ருந்தும்ந டந்தும்துணை செய்வாய் நாகம்மாளே
ஒன்றுமி யலாதேனுன் னருளுக்கே இணையாக கவிதை மாலை
நன்றுன்க முத்துக்கு நாயகியே நானணியாய்ப் பூட்டினேனே

பூட்டியவிக் கவிமாலை புனிதமுறும் அடியார்கள் புகலும்போதுன்
தாட்டா மரைகாட்டித் தண்ணளியை நீகாட்டித் தளர்வுநீக்கி
வாட்டமுறும் அடியார்க்கு வளம்பலவும் நீயாக்கி வளர்த்து நாளும்
கோட்டமெலாம் நீதவிர்ப்பாய் கொற்றமொடு வாழ்ந்திடுவார்
பூரிப்பாரே

பூரணியாய்ப் புராதனியாய் புங்கவர்சொல் மெய்ப்பொருளாய்ப் புவனிக்கெல்லாம்
காரணியாய்க் கார்முகிலாய் காற்ருகித் தீயாகிக் ககனமாகி
ஆரணமாய் அண்டமுமாய் அண்டத்தின் அப்பாலுக் கப்பாலான
சீரணியான் சீரணியில் திகழ்கின்ருன் அனைத்துக்கும் அவளே ஆதி

## வாழ்த்து

அம்பிகை அரசும் வாழி அந்தணர் ஆவும் வாழி
ஒண்டொடி பங்கன் வாழி உமையவள் அடியார் வாழி
பண்ணொடு படிப்போர் வாழி பாவலர் புலவர் வாழி
நனகனம் கேட்போர் வாழி நானிலம் வாழி வாழி

மங்களம்

